8th August 1960]

SRI P. G. MANICKAM : சர்க்கார் ஜுலை மாத முடிவிற்குள் ஸ்காலர்ஷிப்பை மாணவர்களுக்கு பட்டுவாடா செய்யவேண்டும் என்று மாநில அபிவிருத்தி கமிட்டி முடிவு செய்து தீர்மானம் போட்டிருக்கிறது. என்னுடைய கேள்வி அதன் பிரகாரம் கொடுக்கமுடியுமா என்பதுதான். சென்ற வருடம் ஸ்காலர்ஷிப் தொகை மார்ச் மாத கடைசியில்தான் கொடுக்கப்பட்டது. அம்மாதிரி இல்லாமல் இந்த வருஷம் ஜுலை அல்லது ஆகஸ்ட், செப்டம்பருக்குள் பட்டுவாடா செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : காலதாமதத்தைப் போக்கி எவ்வளவு துரிதமாக ஸ்காலர்ஷிப் கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI S. LAZAR : உதவி மானியம் மத்திய சர்க்காராலும், மாநில சர்க்காராலும் கொடுக்கப்பட்டு வருகிறது. காலதாமதம் என்பது பொதுவாக இருக்கக்கூடிய குறை. மாநில சர்க்காரைப் பொறுத்தவரை ஒரு புதிய முறையைக் கையாளுகிருர்கள். ஆனுல் மத்திய சர்க்காரால் ஏற்படும் காலதாமதத்திற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்கார் உதவியை நேரடியாக கொடுக்கிருர்கள். அதனுல் காலதாமதம் இருக்காது.

SRI A. GOVINDASAMY : வருமான சர்டிபிகேட் கொடுப்பதில் சில தாசில்தார்கள் காலதாமதம் செய்கிருர்களா ? அம்மாதிரி காலதாமதம் செய்யாமல் உடனடியாக கொடுப்பதற்குத் தாசில் தாருக்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தாசில்தார் பணக்காரர் யார் ? ஏழை யார் என்று கண்டுபிடிப்பதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படும். அப்படி அவர்கள் நன்ருக ஆராயாமல் கொடுத்து விட்டால் அவர்களின் வேலைக்கே ஆபத்தாக முடியும்.

New Bus routes in South Arcot district

* 16 Q.—SRI K. GOPALA KOUNDER : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு ஜில்லாவில் 1959-ம் வருஷம் ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1960-ம் வருடம் மே மாதம் 1-ம் தேதி வரை 15 மைல்களுக்கு உட்பட்ட பஸ் ரூட்கள் எத்தனை சாங்ஷன் செய்யப் பட்டன ?

(ஆ) இவைகள் தாலூகாவாரியாக எந்தெந்த ரூட்டுகள் ?

THE HON. SRI V. RAMIAH : (a) Three.

(b) (i) Tindivanam Taluk—Tindivanam to Rettanai.

(ii) Kallakuruchi taluk—Kallakuruchi to Koothagudi.

(iii) Tirukoilur taluk—Ulundurpet to Aladipalakkollai,

[8th August 1960

Sri K. GOPALA KOUNDER: இந்த மாதிரி 15 மைல் நீளமுள்ள மெட்டல் இல்லாத ரோடுகளுக்கு பஸ் ரூட்டுகள் கொடுக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMIAH: போக்குவரத்திற்கு லாயக்கான ரோடுகள் இருக்கிறதென்று என்ஜினியரிங் இலாகா அதிகாரிகள் ஆராய்ந்து உத்தரவு போட்டால் அங்கு கொடுப்பதற்கு கஷ்டம் இருக்காது.

Sri V. SUBBIAH: இந்த 15 மைல் நல்ல ரோடுகள் இருக்கும் இடங்களில் புத்த புதிதாக பஸ் ரூட்டுகள் கொடுப்பதற்கு அரசாங்க உத்தரவு உண்டா ?

THE HON. SRI V. RAMIAH: இப்பொழுது 15 மைல் நல்ல ரோடுகள் இருக்கும் இடங்களில் பஸ் ரூட்டுகள் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருந்தாலும், அதிகமான பஸ்கள் விட வேண்டுமென்ற கோரிக்கை இருந்தாலுங்கூட, அதிகப்படுத்தலாமா வேண்டாமா என்பனபோன்ற எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து பார்த்துத்தான் எடுத்துக்கொள்ளமுடியும்.

Sri A. GOVINDASAMY: சிதம்பரத்தில் தேர்தல் காலத்தில் ஒரு காங்கிரஸ்காரருக்கு பஸ் ரூட் கொடுத்திருப்பது உண்மையா ?

MR. SPEAKER: The question is out of order.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJU: ஆந்திரா ராஜ்யத்தில் திருப்பதி தேவஸ்தானத்திற்கு பஸ் ரூட் கொடுத்திருப்பதுபோல், சென்னை ராஜ்யத்திலும் பழனி தேவஸ்தானத்திற்கும் பஸ் ரூட் கொடுக்க உத்தேசம் உண்டா ?

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

Sakkirapuram Harijan Colony

*** 17 Q.—Sri K. GOPALA KOUNDER:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுகா, சக்கராபுரம் ஹரிஜன காலனியில் ஐம்பது வீடுகள் கட்ட சாங்ஷன் செய்து இருப்பது வீடுகள் முடிக்கப்பட்டு முப்பது வீடுகள் கட்டப்படாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) கட்டப்படாமல் காலதாமதமாவதற்கு காரணம் என்ன ?

(இ) எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN: (அ) Yes, Sir.

(ஆ) Originally it was proposed to construct 50 houses in that village during 1956–57. As the acquisition of the required